


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜுன் 14, 2018 | புரட்சி 17 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00


## ஜாதி வெறிப் படுகொலைக்கு உள்ளான
# கச்சநத்தம் கிராமத்தில் கழகத் தோழர்கள் நேரில் ஆறுதல்




*ஜாதி வெறி படுகொலை – தாக்குதலுக்குள்ளான கச்சநத்தம் கிராமத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் குழு நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்தித்துப் பேசியது. அது குறித்து கழக வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் தரும் செய்தி:*

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் மானாமதுரை, திருப்பாச்சேத்தி அருகே உள்ள ‘கச்ச நத்தம்’’ என்ற ஊரில் நடைபெற்ற படுகொலைகளை பார்வையிடவும், பாதிக்கப்பட்ட தலித் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிடவும் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 06.06.2018 புதன் கிழமை காலை 10 மணிக்கு கழகத்தின் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வைரவேல், பள்ளிபாளையம் முத்துப்பாண்டி, கோபி ஒன்றிய செயலாளர் அருளானந்தம், பழனி வட்டம் பொறுப்பாளர் மருதமூர்த்தி ஆகியோர் அடங்கிய குழு மதுரை சென்றடைந்தது. அங்கு மதுரை மாவட்ட பொறுப்பாளர் காமாட்சி பாண்டியன், காளையார்கோவில் பொறுப்பாளர் முத்துக்குமார், காரைக்குடி பெரியார் முத்து, வினோத் ராஜா, சிவா, பூர்ணிமா, காயத்திரி ஆகியோர் தயாராக இருந்தனர். அவர்களையும் இணைத்துக் கொண்டு, மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கச்சநத்தம் பகுதியின் காயப்பட்ட மக்களைச் சந்தித்தோம்.

மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை பெற்று வந்த மலைச்சாமி, தனசேகரன், சுகுமார் ஆகியோரைச் சந்தித்து ஆறுதல் கூறி உங்களுக்கு எங்களது திராவிடர் விடுதலைக் கழகம் என்றும் ஆதரவாக இருக்கும் தைரியமாக இருங்கள் என்றோம்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சம்பவம் நடந்த ‘கச்சநத்தம்’ பகுதிக்கு சென்றடைந்தோம். பாதிக்கப்பட்ட மக்களின் இல்லங்களை நேரில் பார்வையிட்ட போது நெஞ்சு பதறியது. தெரு வெங்கும் இரத்தம் பாய்ந்த சுவடுகள், வீடுகளுக்குள் மனித இரத்தத் திட்டுகள், வீட்டில் இருந்த தொலைக்காட்சி பெட்டிகளை வீச்சரிவாளால் வெட்டிய காட்சிகள், பொருள்கள் அனைத்தும் சூரையாடப்பட்டும், அடித்து நொறுக்கப்பட்டும், இரைந்தும் கிடந்தன. பீரோவில் இருந்த நகை பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அப்போது அங்கிருந்த பெரியவர் தேவேந்திரன் அவர்களிடத்தில் பேசிய போது, நாங்கள் 40 குடும்பங்கள் மட்டும் இப்பகுதியில் உள்ளோம். நாங்கள் பள்ளர் வகுப்பைச் சாந்தவர்கள். இப் பகுதியில் எங்களைச் சுற்றிலும் 2000 குடும்பங்கள் அகமுடையார் என்ற ஆதிக்க ஜாதியினர் உள்ளனர். இவர்களின் ஆதிக்க ஜாதிக் கொடுமைகளுக்கு மத்தியில் தான் காலம்காலமாக சகிப்புத் தன்மை யோடு வாழ்ந்து வருகின்றோம்.

நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதாலேயே இவர்கள் எங்களை அடக்கி ஆள்வதிலேயே குறியாக உள்ளனர். எங்களுக்கு சொந்தமாக விவசாய நிலங்கள் உள்ளன. பெரும்பாலும் விவசாயம் செய்வதே எங்களின் தொழில். எங்கள் பிள்ளைகள் ஊரில் பாதிக்கும் மேலாக படித்து நல்ல வேலைகளில் உள்ளனர்.

ஆனால் எங்கள் மக்களைப் படுகொலை செய்த நபர்கள் கஞ்சா, சாராயம் விற்பதும், களவு செய்வதுமே இவர்களின் தொழில். இந்த பிரச்சனைக்குக் காரணமே, இவர்கள் கஞ்சா விற்றுக் கொண்டு அடிக்கடி எங்கள் பிள்ளைகளுக்கு தொல்லை கொடுத்து வந்ததுதான். ஒரு கட்டத்தில் நாங்கள் காவல்துறையிடம் புகார் செய்தோம். ‘காவல் துறையில் புகார் செய்யும் அளவுக்கு வந்து விட்டீர்களா? உங்களைக் கொல்லாமல் விட மாட்டோம்’ என்று கூறி வந்தனர். வழக்கம் போல காவல்துறை கண்துடைப்புக்காக விசாரித்து விட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் எங்கள் ஊரில் பண்டிகை நடந்தது. அப்போது நடைபெற்ற களரி விழாவின் போதும் எங்களிடம் தகராறு செய்தனர். பண்டிகைக்காக வெளியூரில் வேலையில் இருந்தவர் களும், படித்துக் கொண்டிருந்த இளைஞர்களும் ஊருக்கு வந்திருந்தனர். பண்டிகை முடிந்து அடுத்த நாள் இரவு அனைவரும் நாங்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தோம். இரவு 9.30 மணி இருக்கும்போது, 25 நபர்கள் அடங்கிய ‘அகமுடையார்’ வகுப்பு இளைஞர்கள் மின் இணைப்பு அனைத்தையும் துண்டித்து விட்டு வீடுகளுக்குள் புகுந்து தாக்கி னார்கள். எதிர்பட்ட அனைவரையும் வீச்சரிவாளால் வெட்டினர். ஆறுமுகம் என்பவரை அவருடைய வீட்டுக்குள் இருந்து வெளியே இழுத்து வந்து தெருவில் வைத்து கத்தியால் வெட்டினர். அவர் அந்த இடத்திலேயே இறந்தார். அதேபோன்று சண்முக நாதனையும் படுகொலை செய்தனர்.

அதே தெருவில் உள்ள சுகுமார் என்ற இளைஞர். இவர் எம்.எஸ்சி. இயற்பியல் பட்டதாரி. அவரையும் வீட்டுக்குள் புகுந்து வெட்டினர். சுகுமாருக்கு 48 இடங்களில் வெட்டுகாயங்கள் உள்ளன.

வீட்டுக்கு வெளியே தூங்கிக்கொண்டிருந்தவர் மலைச்சாமி, இவர் லாரி டிரைவர். அவரை படுக்கையிலேயே வைத்து சரமாரியாக வெட்டினார்கள். கைவிரல்கள் கை, கால் அனைத்துமே பலத்த வெட்டுபட்டன. அதே போன்று தனசேகர் அவர்களையும், வெட்டினர். அவருக்கும் கை, கால் அனைத்துமே வெட்டுபட்டன.

இந்த சம்பவத்தில் ஆறுமுகம், சண்முகநாதன், சந்திரசேகரன் ஆகியோர் இறந்துள்ளனர். மலைச் சாமி, தனசேகரன், சுகுமார் ஆகியோர் மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். இருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதாலேயே ‘ஆதிக்க ஜாதி’ என்ற திமிருடன் எங்களிடத்தில் நடந்து கொள்கின்றனர். எங்கள் இளைஞர்கள் நன்கு படிப்பதும், வேலைக்கு செல்வதும் இவர்களுக்கு மிகுந்த எரிச்சல், எங்களுக்கு விளைநிலங்கள் சொந்தமாக இருப்பதும் இவர்களுக்கு பொறுக்கவில்லை.

இவர்களில் பெரும்பாலும் கஞ்சா விற்பதும், சாராயம் விற்பதும் தான் தொழில். இவர்களுக்கு அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்பதே, இந்த ஆதிக்க ஜாதி மனப்பான்மையே இந்த படுகொலைக்கு முக்கிய காரணம் என்றார்.

இந்த சம்பவத்திற்குப் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் 10 நாட்களாக இங்கு தங்கியுள்ளனர். இவர்கள் முன்பே எங்கள் புகாருக்கு நடவடிக்கையை சரியாக எடுத்திருந்தால் இந்த படுகொலை நடந்திருக்காது என்று காவல்துறை மீது தனக்கு இருந்த அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

தற்போது காவல்துறை இது தொடர்பாக ஆவாரங்காட்டைச் சார்ந்த 15 நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். 5 நபர்களை கைது செய் துள்ளனர். மற்றவர்கள் தலைமறைவாக உள்ளனர்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நாங்கள் ஆறுதல் கூறியதுடன், உங்களுக்கு தேவையான சட்ட உதவிகள் அனைத்தையும் எங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக செய்கின்றோம் நீங்கள் தைரியமாக இருங்கள் என்று கூறியதுடன் நமது கழக வழக்கறிஞர் அருண் அவர்களை தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு பேசச் செய்தோம். அத்துடன் அவருடைய தொலைபேசி எண்ணையும் அவர்களிடத்தில் வழங்கினோம்.

கச்சநத்தம் பகுதியைச் சார்ந்த இந்த மக்கள், இந்த 40 குடும்பங்களும் எந்த இயக்கத்திலோ, அரசியல் கட்சியிலோ உறுப்பினர்களாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஜாதிவெறிக்கு காரணமான இந்துமதம், இந்துத்துவ ஜாதிய கட்டமைப்பு, இந்த கட்டமைப்பை உருவாக்கி அதனை பாதுகாக்கும் பாசிசவெறி பிடித்த பார்ப்பன கும்பல் இவைகளை எதிர்த்து முற்றிலுமாக அழிக்காமல், இந்தப் படுகொலைகளை, அப்பாவி மக்களின் உயிர்களை, உடைமைகளை நம்மால் பாதுகாக்க முடியாது. ஜாதியின் ஆணி வேரை எதிர்க்கும் பெரியார் போராட்ட முறையே இதற்கு சரியான மருந்து.

நமது கொள்கைகளை வீரியமாக எடுத்துச் செல்வதிலும் அதனை மக்களிடையே பரப்புவதிலும் - அவர்களின் மனதில் பெரியாரின் ஜாதி ஒழிப்பு தத்துவத்தை நிலைநிறுத்துவதிலும் இன்னும் சற்று கூடுதலான கவனமும், அக்கறையும் நாம் செலுத்த வேண்டும். நம் அணுகுமுறைகளில் அவசியம் மாற்றம் தேவைப்படுவதால் அதுகுறித்து விரிவாக விவாதித்து அடுத்த தலைமுறைகளில், ஆதிக்கம் இல்லாத, அடிமைத்தனம் இல்லாத சமூகத்தை நிலை நிறுத்திடவும், ஜாதியத்தின் ஆணிவேரைப் பிடுங்கி எறியவும், உரிமை வேட்கையைத் தூண்டவும் நாம் புதிய உத்திகளில் பயணிக்க வேண்டி உள்ளது.

**இராம. இளங்கோவன் (வெளியீட்டுச் செயலாளர்),**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

தலையங்கம்

## கொல்லைப்புற வழியில் ‘இராமராஜ்ய’மா?

தனியார் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களிலிருந்து நபர்களைத் தேர்வு செய்து 10 மத்திய அரசுத் துறைகளில் இணைச் செயலாளர்களாக நேரடியாக நியமிக்கப் போவதாக நடுவண் ஆட்சி அறிவித்திருக்கிறது. இது சட்ட விரோதமாக நிர்வாக அமைப்பைப் புறந்தள்ளி, அரசு எந்திரத்தை ‘பார்ப்பன காவியமாக்கும்’ நடவடிக்கையேயாகும்.

இந்தப் புதிய அறிவிப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய அதிகாரிகள் முறையாக பதவி உயர்வு பெற்று இணைச் செயலாளராகும் வாய்ப்பு தடுக்கப்படுகிறது. இணைச் செயலாளர்கள் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று நடுவண் ஆட்சியின் அறிவிப்பே கூறுகிறது. இத்தகைய அதிகார மய்யத்தில் செயலாற்றும் உரிமை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு மறுக்கப்படுவது மற்றொரு சமூக அநீதியாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த பத்து துறைகளும் நிர்வாகத் திறமையற்ற அதிகாரிகளைக் கொண்டு தான் செயல்பட்டு வந்ததா என்ற கேள்விக்கும் நடுவண் ஆட்சி பதில் சொல்ல வேண்டும். தனியார் நிறுவனங்களிலும் ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும் உயர் பொறுப்பில் பணியாற்றுகிறவர்கள் பார்ப்பன உயர்ஜாதிப் பின்னணியிலிருந்து வந்தவர்களாகவே இருப்பார்கள். ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று அரசு அறிவிப்பு கூறுவதிலிருந்து இதனால் பயனடையப் போகிறவர்கள் யார் என்பதை சொல்லத் தேவை இல்லை.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் ‘சங் பரிவார்’ கொள்கையை ஏற்று நிர்வாகத்தை காவி மயமாக்குவதில் முனைப்புக் காட்டும் பார்ப்பனர்களிடம் நடுவண் அரசின் முக்கிய அதிகாரப் பொறுப்புகள் கைமாற்றப்பட இருக்கின்றன.


ஏற்கனவே – ஆர்.எஸ்.எஸ்.சின் கிளை அமைப்புகளான ‘ஸான்ஸ்கிருதி உதன் நியாஸ்’ என்ற அமைப்பு கல்வி மற்றும் கலாச்சாரத் துறைகளில், நடுவண் அரசை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. பாரதிய சிக்சா மண்டல் என்ற மற்றொரு ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்பு ஆரம்பப் பள்ளியிலிருந்து உயர்கல்வி வரை பாடத் திட்டங்களை உருவாக்குவது உள்ளிட்ட கொள்கைத் திட்டங்களில் வழிகாட்டி வருகிறது. பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளில் பா.ஜ.க. பொதுச் செயலாளர் ராம் மாதவ் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவலின் மகன் சவுர்யா டோவல் இணைந்து நடத்தும் ‘இந்தியா நிறுவனம்’ அரசை வழி நடத்திக் கொண்டிருக்கிறது.

இவை தவிர, இந்திய உயர்கல்வி ஆய்வு மய்யம், இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், இந்திய கலாச்சார உறவுகளுக்கான மய்யம், கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில், தேசிய நூல் அறக்கட்டளை ‘பிரச்சார் பாரதி’ என்ற தொலைக்காட்சி நிறுவனம், சென்சார் போர்டு மற்றும் அய்.அய்.டி., அய்.அய்.எம். ஆகியவற்றின் தலைவர்களாக ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனிய கருத்துகளில் ஊறிப் போனவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அகில இந்திய தேர்வுகளில் முதல் நிலை தேர்வு முதன்மை தேர்வு நேர்முகப் பேட்டி என்று மூன்று கட்டங்களில் தேர்ச்சி பெற்று பயிற்சிக்காக அனுப்பிய பிறகு மற்றொரு குழு அவர்களுக்கான பணித் துறையை மதிப்பெண் வழங்கி நிர்ணயிக்கும் என்ற விபரீத முடிவை நடுவண் அரசு எடுத்திருக்கிறது. அந்த மற்றொரு குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் தேர்வு செய்து அனுப்புகிறவர்களாகவே இருப்பார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை.

ஆக, பதவிக் காலம் முடிவதற்குள் அரசு நிர்வாக அதிகார அமைப்புகளை முழுமையாக பார்ப்பன – மதவெறிக் கட்டமைப்பாக மாற்றும் முடிவுக்கு நடுவண் ஆட்சி வந்துவிட்டது. இது பச்சைப் பார்ப்பனியம். ‘இராமராஜ்யம்’ கொல்லைப்புற வழியாக நுழைந்து கொண்டிருக்கிறது.

# ‘காலா’ ரஜினியின் படமல்ல; இரஞ்சித் படம்



இயக்குனர் ரஞ்சித் இயக்கத்தில் வெளி வந்திருக்கும் ‘காலா’ - ‘பம்பாய் ‘தாராவி’ப் பகுதியில் வாழும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் நில உரிமைக்கான போராட்டக் களத்தை பின்புலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படம். ஆசியாவின் மிகப் பெரும் ‘சேரி’யாகக் கூறப்படும் ‘தாராவி’யில் நெருக்கடியில் அடிப்படை வசதிகளின்றி வாழும் குடிசைகளை அகற்றி அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டத்துடன் முன் வருகிறார், ஒரு மராட்டிய உயர்ஜாதி - உயர் வர்க்க தொழிலதிபர். வசதி படைத்தவர்களின் விளையாட்டான ‘கோல்ஃப்’ விளையாட்டு மைதானம், நீச்சல் குளம், மருத்துவமனைகளோடு வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் பின்னணியில் ஒடுக்கப்பட்ட மக்கள் காலங்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நில அபகரிப்பு அடங்கி யிருப்பதைக் கண்டு பெரும்பான்மை மக்கள் திட்டத்தை எதிர்க்கிறார்கள். இந் நிறுவனத்துக்கு இயக்குனர் ரஞ்சித் சூட்டியுள்ள பெயர் ‘மனு ரியாலிட்டி’. மனுதர்மத்தின் மறுவடிவமாக இதை சித்தரிக்கிறார். காலாவின் தலைமையில் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களை ஒடுக்குவதற்கு அமைச்சர்கள், காவல்துறை, விலை போகக்கூடிய துரோகிகள், மதவாத அரசியல் என்று அத்தனை வியூகங்களையும் பயன்படுத்துகிறார் தொழில் அதிபர். காலாவின் மனைவியும் மகனும் கொல்லப்படுகிறார்கள். போராடும் மக்கள் மீது துப்பாக்கி சூடு; காலாவைக் கொல்ல சதி என்று காட்சிகள் விறுவிறுப்பாக நகருகின்றன.

பிளாஸ்பேக் காட்சிகளை கார்ட்டூன் வடிவத்தில் சில நிமிடங்களில் சொல்லிவிட்டு கதையை நகர்த்துவதிலும், ரஜினிக்கும் ஹீமாகுரோசிக்குமான பழைய காதலை கவித்துவமாக சித்தரித்ததிலும், ரஜினியின் முழுமையான ஆற்றலை இயல்பாக வெளிக் கொண்டு வந்திருப்பதிலும், பாடலோடு கதையை நகர்த்துவதிலும் இயக்குநரின் திறமை பளிச்சிடுகிறது. ரஜினியின் மனைவியாக நடித்து வாழ்ந்திருக்கிறார் ஈஸ்வரி ராவ். நெல்லை வட்டார மொழியில் வெளுத்து வாங்குகிறார். ரஜினி தனது முன்னாள் காதலியை சந்தித்துத் திரும்பிய போது, ரஜினி மனைவி செல்வி (ஈஸ்வரி ராவ்) தானும் தனது முன்னாள் கிராமத்து காதலனைச் சந்திக்க கிராமத்துக்குப் போவதாகக் கூறும் ‘பெண்ணுரிமை’ காட்சி அமர்க்களப்படுத்துகிறது.

ரஜினியின் முன்னாள் காதலி தொழிலதிபரின் காலைத் தொட்டு வணங்க கட்டாயப்படுத்தப்படும் போது மறுக்கிறார். உன்னுடைய கணவர் யார் என்ற தொழிலதிபரின் கேள்விக்கு “நான் திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தை பெற்றுள்ள பெண்” என்று கம்பீரமாக பேச வைத்து, பெண் விடுதலைக்கு பெருமை சேர்த்துள்ளார் இயக்குனர்.

எப்போதும் குடிமயக்கத்திலேயே இருக்கும் ரஜினியின் மாப்பிள்ளையாக நடிகர் சமுத்திரக்கனியின் கூர்மையான வசனங்கள் படத்துக்கு வலிமை சேர்க்கின்றன.

கதையின் வில்லனாக தொழிலதிபராக வரும் நானா படேகர், நடிப்பில் அசத்தியிருக்கிறார்.

சென்னை பூந்தமல்லி பகுதியில் ‘தாராவி’ பகுதியை இயல்பாக உருவாக்கிக் காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் முரளி. அவரது திறமைக்கு ‘சபாஷ்’ போட வேண்டும்.

கரிகாலனாக வரும் காலா, தனது மகனுக்கு புரட்சியாளர் லெனின் பெயரை சூட்டியிருக்கிறார். மண்ணையும் மக்களையும் புரிந்து கொள்ளாத புரட்சி ஒரு போதும் வெற்றி பெறாது என்று மகன் லெனினுக்கு எடுத்துக் கூறுகிறார். ஒரு கட்டத்தில் தந்தையின் போராட்டத்தில் இணைத்துக் கொள்கிறார் லெனின்.

‘தூய்மை பாரதம்’ என்ற காவி அரசியலின் பின்னால் உள்ள ஆதிக்க சுரண்டல்; மதமோதல்களைத் தூண்டிவிட்டு மக்களை பிளவுபடுத்தும் ‘இந்துத்துவ’ அரசியல்; காலாவின் வீடு தேடி வரும் தொழிலதிபர், வீட்டில் தண்ணீர்கூட குடிக்காததை சுட்டிக் காட்டி காலாவின் மனைவி பேசும் வசனம்; கரிகாலன் என்று தமிழில் பெயர் சூட்டியிருக்கும் சிறப்பு; குழந்தைகளை நன்றாகப் படிக்க வைப்பதற்கே முன்னுரிமை தர வேண்டும் என்ற காலாவின் வசனம்; காலாவின் மனைவி, மகன் கொல்லப்பட்ட பிறகு அவர்களுக்கு மதச் சடங்குகளின்றி ‘படத்திறப்பு’ வழியாக இல்லத்தில் நடத்தப்படும் அஞ்சலி; எங்கள் நிலத்தைப் பறிக்க கடவுளே வந்தாலும் தடுப்போம் என்ற வசனம் என்று நுணுக்கமாக முற்போக்குக் கருத்துகளைப் படம் முழுதும் நிரப்பியிருக்கிறார் இயக்குனர்.

“நாங்கள் ஆளுவதற்கே பிறந்தவர்கள்” என்று தொழிலதிபர் திரும்ப திரும்ப கூறுகிறார். இராமாயணம் என்பது ஆரிய-திராவிடப் போராட்டத்தின் கதை என்று பெரியார் கூறிய கருத்தை, மிகத் துணிவோடு நில உரிமைப் போராட்டத்தின் பின்புலமாக்கியிருக்கும் இயக்குனர் ரஞ்சித்தைப் பாராட்ட வேண்டும். வில்லனாக வரும் தொழிலதிபர் வீட்டில், ‘இராமாயண உபன்யாசம்’ நடத்துகிறார்.

அரக்கர்கள் அழிக்கப்பட வேண்டும் என்று இராமகாதை பேசுகிறது; கரிகாலன் தனது மேஜையில் ‘இராவண காவியம்’ நூலை வைத்திருக்கிறார்.

தலித் - ஒடுக்கப்பட்ட மக்கள் பார்ப்பனிய - உயர்ஜாதி - உயர் வர்க்கத்துடன் நடத்தும் உரிமைப் போராட்டத்தை இராமாயணத்தின் ‘தேவ-அசுரப்’ போராட்டத்தோடு இணைத்து ஆரிய - திராவிட போராட்ட வரலாற்றின் தொடர்ச்சியாக துணிவோடு வெளிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர்.

பெரும் முதலீட்டில் ‘சூப்பர் ஸ்டாரை’ வைத்து இயக்கும் படத்தின் வாய்ப்பு தனக்குக் கிடைத்தபோது, அதை ஜாதி எதிர்ப்பு இலட்சியத்துக்குப் பயன்படுத்த முன் வந்திருக்கிறார்.

இது வரை ரஜினியின் படங்கள், ஜாதி எதிர்ப்பையோ சமூக எதார்த்தங்களையோ பேசாமல், அவைகளை மூடி மறைத்து மேலோட்டமான சமூக அநீதிகளுக்குப் போராடும் நாயகராகவே ரஜினியை சித்தரித்து வந்திருக்கின்றன. அந்த மனநிலையில் கட்டமைக்கப்பட்ட ரஜினி ரசிகர்கள், ரஜினியை தலித் மக்கள் போராளியாகப் பார்க்க விரும்புவார்களா என்பது கேள்விக்குறிதான். பெரும்பாலான ரஜினி ரசிகர்களின் சாதிய உளநிலை இதை ஏற்குமா என்பதையெல்லாம் புறந்தள்ளி, இயக்குனர், ரஜினியை ‘ஜாதி எதிர்ப்பு’ப் போராளியாகப் பேச வைத்திருக்கிறார். அதனால்தான் ரஜினியின் துணைவியார் லதா, கரிகாலன் பேசும் வசனங்கள், ரஜினியின் சொந்த கருத்துகள் அல்ல என்று படம் வெளி வந்த அன்றே கூறிவிட்டார்.

‘காலா’ பாத்திரத்தை ஜீரணிக்க முடியாத பா.ஜ.க.வினரும், சங் பரிவாரங்களும் வெளிப்படையாக எதிர்க்க முடியாமல் கள்ள மவுனம் சாதித்து வருகின்றனர். ‘மெர்சல்’ திரைப்படத்தில் ‘ஜி.எஸ்.டி.’க்கு எதிராக நடிகர் விஜய் பேசும் காட்சிக்காக அப்படத்துக்கே தடை போட வேண்டும் என்று ‘துள்ளிக் குதித்த’ பா.ஜ.க.வினர், இந்து முன்னணிகள் அதைவிடப் பல மடங்கு கடுமையான ‘காவி எதிர்ப்பு’ அரசியலைப் பேசும் ‘காலா’வை எதிர்க்க முடியாமல், வாய்மூடிக் கிடக்கிறார்கள். இதிலும் இயக்குனர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

‘போராட்டமே உரிமைகளைப் பெற்றுத் தரும்’ என்ற மய்யக் கருத்தை வலியுறுத்தும் இந்தப் படத்தில் நடித்து முடித்து படம் திரைக்கு வரும் நிலையில் தான், ‘எதற்கெடுத்தாலும் போராடினால் நாடு சுடுகாடாகிவிடும்’ என்று ரஜினிகாந்த் தனது சொந்த உணர்வுகளைக் கருத்தாக வெளிப்படுத்தினார்.

ஆக காலாவின் காட்சியும் வசனங்களும் தனது சொந்த கருத்து அல்ல என்பதை அவரது மனைவி லதாவோடு சேர்ந்து ரஜினியும் வெளிப்படுத்தி விட்டார்.

ஆக, இது ரஜினியின் படம் அல்ல; இயக்குனர் ரஞ்சித்தின் படம். ஆனாலும், மாறுபட்ட கருத்துகளையும் மனமுவந்து ஏற்று நடிக்க வந்த ரஜினியைப் பாராட்டலாம்.

வாய்ப்புகள் கிடைத்தால் நாங்களும் சாதித்துக் காட்டுவோம் என்று நிரூபித்து சமூக நீதிக் கொள்கைக்கு மகுடம் சூட்டி விட்டார் ரஞ்சித்.

**– கண்டு வந்தவன்**

## கழக மாநாட்டில் திருமுருகன் காந்தி பேச்சு

# தண்ணீர் வணிகமாகும் ஆபத்து

*ஏப்ரல் 30, 2018 அன்று தோழர் பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, இராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்-நீர் மறுப்பு - நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி 'நீர் மறுப்பு' என்ற தலைப்பில் ஆற்றிய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

இந்த அரசு திட்டமிட்டு வணிகப் பயிர்களை தமிழக விவசாயத்திற்குள் நுழைக்கிறது. மறுபுறத்திலே தண்ணீரின் அளவைக் குறைக்கிறார்கள். அதே சமயத்தில் மோட்டார்களைக் கொண்டு ஆழ்துழாய் கிணற்றுப் பாசனத்தை வளர்க்கும் முறைக்கு அரசு மானியம் கொடுக்கிறது. மானியம் அளிக்கப்பட்ட பிறகு 25 விழுக்காடாக இருந்த ஆழ்துழாய் கிணற்றுப் பாசனம் இரண்டு மடங்காக அதிகரிக்கிறது. கால்வாயை நம்பியிருந்த பாசனம் 37 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைகிறது. குளத்தின் மூலமான பாசனம் 37 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் குளத்தை மூடுவது பற்றிய அக்கறை இல்லாமல் போனது. இன்னொரு பக்கம் காவிரியில் தண்ணீர் அளவு குறையக் குறைய ஆழ்துழாய் கிணறுகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது.

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தது தமிழ்நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தை முடக்குவது என்பதுதான். அதற்குக் காவிரியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால் இங்கு நீதிக் கட்சி காலத்திலிருந்து, திராவிடர் இயக்கப் போராட்டங்களின் மூலமாக நமக்குக் கிடைத்த கல்வியின் மூலமாக தமிழ்நாடு தனது பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. ஆனால் விவசாய நிலப்பரப்பு என்பது தொடர்ச்சியாக அழிக்கப்படுகிறது. இன்றைய நிலையில் தண்ணீரும் வணிகப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. மிக முக்கிய வணிகக் காரணியாகவும், ஏற்றத்தாழ்வுக்கான புதிய காரணியாகவும், தீண்டாமைக்கான காரணியாகவும் தண்ணீர் உருவெடுத்துக் கொண்டிருக்கிறது.

பணம் இருப்பவனுக்குத்தான் தண்ணீர், இல்லாதவனுக்குத் தண்ணீர் இல்லை என்ற புதிய வகையான தீண்டாமை உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று சென்னை நகரத்தின் தண்ணீர் வணிகம் மட்டும் 1800 கோடி ரூபாய். இவ்வளவு லாபம் இங்கிருக்கிற முதலாளிகளுக்குக் கிடைக்கும் பட்சத்திலே இவர்கள் எப்படி காவிரி உரிமையைப் பெற்றுத்தருவார்கள்? இங்கே ஆண்ட கட்சி, ஆளும் கட்சியின் பிரதிநிதிகள் இந்த வியாபாரத்தில் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளார்கள். அவர்கள் எப்படி தண்ணீர் உரிமையைப் பேசுவார்கள்? இந்த சூழலில் கர்நாடகம் தண்ணீர் மிகை மாநிலமாக இந்திய அரசால் திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்படுகிறது. தென்னிந்தியாவிலே தண்ணீர் தனியார்மயமாக்கல் மாநிலமாகவும் கர்நாடகாவை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாக தேவைப் படுகிற ஒரு காரணி தண்ணீர். அதை அரசு இலவசமாக வழங்க வேண்டும். ஆனால் அதை வணிகத்திற்குப் பயன்படுத்த முடியும் என்ற சட்டத் திருத்தத்தை கொண்டுவந்தார்கள் கர்நாடகாவில். 13 நகரங்களில் இதற்கு அனுமதி கொடுத்தார்கள். இதில் முக்கியமாக மைசூரு நகரின் தண்ணீர் விநியோகத்தை டாடா நிறுவனத்துக்கு வழங்கியுள்ளார்கள். பிற இடங்களில் பிரெஞ்சு நிறுவனங்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. தார்வாட், ஹூப்ளி போன்ற இடங்களில் நடுத்தர குடும்பங்கள்கூட தண்ணீருக்கு சராசரியாக 50,000 முதல் 60,000 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. ஆகவே தண்ணீரை முழுவதுமாக வணிகப் பொருளாக மாற்றும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலும் தண்ணீர் தேவையை அதிகரிப்பதன் மூலமாக ஒரு வணிக சந்தையை இங்கேயும் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். நாளை ஒருவேளை கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் ஏற்றுமதியாகலாம். இப்போது பெங்களூரு நகரத்திற்குத் தண்ணீர் விநியோகத்தை தனியாருக்கு கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. அந்த தனியார் நிறுவனத்தின் லாப நோக்கத்திற்காகத் தண்ணீரை காவிரியிலிருந்து பெற்றுத்தருவது என்ற தந்திர நடவடிக்கையுடன்தான் தமிழனின் காவிரி



உரிமையை மறுத்து வருகிறார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த அதேநாளில் டைம்ஸ் ஆஃப் இந்தியாவில் ஒரு கட்டுரை வெளியானது. 'பெங்களூரின் தண்ணீர் தேவை அடுத்த பத்தாண்டுகளில் மிக மோசமாக இருக்கும். உலக அளவில் தண்ணீர் இல்லாத நகரங்களில் ஒன்றாக பெங்களூரு மாறப் போகிறது' என்று உலக வங்கி கூறுவதாக அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. அதற்கான அவசியம் என்ன? உச்ச நீதிமன்ற நீதிபதி பேச வேண்டியதன் தர்க்கத்தை அந்த ஊடகத்தின் வாயிலாக அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் சென்னையின் தண்ணீர் தேவைப் பற்றி பேச அவர்கள் தயாராக இல்லை. ஆகவே திட்டமிட்டு ஒரு செய்தியை கட்டமைக்கிறார்கள். அதை உச்ச நீதிமன்றம் வழிமொழிகிறது.

பெங்களூருவின் தண்ணீர் தட்டுப்பாடு என்று இவர்கள் பேச முயல்வதெல்லாம் மைசூரைப் போல, பெங்களூரிலும் தண்ணீர் விநியோகத்தை தனியார் மயமாக்கத்தான். அதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் கார்பரேட்டுகளின் நலனைக் கருத்தில்கொண்டு, பெங்களூரு தண்ணீர் இல்லாமல் வாடுகிறது பேசி நடிக்கிறது. இதற்கெல்லாம் தமிழ்நாட்டிலிருந்து பெரிய எதிர்ப்பு வரப்போவதில்லை, அச்சுறுத்தப் போவதில்லை என்று அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இன்று காவிரி டெல்டாவில் துணை ராணுவத்தைக்கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். இந்த அரசு இரண்டு வருடத்திற்கு முன்பு கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது ஏன் துணை ராணுவப் படையை அங்கே இறக்கவில்லை.

தமிழனுடைய நெற்றியில் துப்பாக்கியை நீட்டி நம்முடைய நிலங்களைப் பிடுங்குகின்றான். நம்முடைய கனிம வளங்களைப் பிடுங்குகின்றான். தண்ணீர் தர மறுக்கின்றான். ஆகவே நீர் மறுப்பு என்பதினுடைய பின்னணி அரசியல் என்பது இவ்வளவு இருக்கிறது.

காவிரியில் தண்ணீர் வரவில்லை என்றால் நிலக்கரி, மீத்தேன், கச்சா எண்ணெய் போன்றவற்றை எடுக்கலாம். இவற்றை எடுக்க குஜராத் மார்வாடி கும்பல்கள் வரப்போகின்றன, வந்து கொண்டிருக் கின்றன. இதை ஏற்றுமதி செய்வதற்கு சிறு துறைமுகங்களை கடற்கரையோரமாக அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் கடலிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளுங்கள் வேறு எதிலும் தண்ணீர் கிடைக்காது என்று சூசகமாக சொல்லத் தொடங்கிவிட்டார்கள். எனவே தண்ணீரை தனியார் மயமாக்கத்தை நோக்கித் தள்ளும் விதமாகவும், தமிழின அழிப்புக்காகவும்தான் தண்ணீரை மறுக்கின்ற வேலையைச் செய்கிறார்கள்.

போர்க்காலத்தில், யுத்த காலத்தில் தண்ணீர் மறுக்கப்பட்டால் அது போர்க்குற்றமாக பார்க்கப்படு கிறது. அப்படியென்றால் அமைதி காலத்தில் தண்ணீரை நிறுத்தினார்கள் என்று சொன்னால் அது இனப் படுகொலைக்காகத்தான் செய்யப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும். ஆகவே இந்தியா தமிழினப் படுகொலையை தமிழ்நாட்டில் நடத்துவதற்குத் தயாராகிவிட்டது. அதற்கு ராணுவத்தையும் இறக்கிவிட்டார்கள், தண்ணீரையும் தடுத்துவிட்டார்கள். இதற்குப் பிறகும் தமிழகம் அமைதி காக்க முடியாது. தனது உரிமைக்கான தொடர்ச்சியான, சமரசமில்லாத போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த நெருப்பை இத்தனை ஆண்டுகளாகப் பெரியார் இயக்கங்கள் பாதுகாத்து வந்திருக்கிறது, என்றார் திருமுருகன் காந்தி.

**செய்தி தொகுப்பு : ர. பிரகாசு**

# சீதைக்கு வந்த "சோதனை"

உ.பி.யின் துணை முதல்வராக இருப்பவர் தினேஷ் சர்மா எனும் பார்ப்பனர். இவர் அவ்வப்போது அதிரடியான ஆராய்ச்சிகளில் நாட்டையே கலக்குகிறார். 'மோடிக்கு நான் சளைத்தவனல்ல' என்று சவால் விடுமளவுக்கு அவரது அறிவியல் கண்டுபிடிப்புகள் இருக்கின்றன.

மகாபாரத காலத்திலேயே 'இண்டர்நெட்' வந்துவிட்டது என்று பேசினார். இப்போது தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பைப்போல் அப்போதே நேரடி ஒளிபரப்பு இருந்தது என்றும், நாரதர் தான் அந்தக் காலத்து செய்தியாளராக இருந்தார் என்பதும் அவரது கண்டுபிடிப்புகள் - தலையைச் சுற்ற வைக்கிறது. இப்படி எல்லாம் கூச்சநாச்சமின்றி பேசக்கூடிய 'துணிவு' தான் நம்மை மூக்கின் மீது விரலை வைக்கிறது. அவரது 'கண்டுபிடிப்புகள்' இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

"சோதனைக் குழாய் குழந்தை நமது இதிகாச காலத்திலேயே இருந்திருக்கிறது. சோதனைக் குழாய் வழியாக பிறந்த முதல் குழந்தை இராமாயண சீதைதான்" என்றும் கண்டுபிடித்திருக்கிறார். இதிகாச காலங்களில் பயன்படுத்தப்பட்ட புஷ்பக விமானங்களே இப்போதைய விமானங்களுக்கு முன்னோடி என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

இதிகாச புராண காலங்களிலே இருந்த விமானம், 'இன்டர்நெட்', 'சோதனைக்குழாய் பிறப்பு' எல்லாம், அதற்குப் பிறகு எங்கே போயின? இந்த கண்டுபிடிப்புகளை இந்துத்துவாவுக்கே தொடர்பில்லாத விஞ்ஞானிகள் கண்டுபிடித்து, அறிவியல் அடிப்படையில் பயன்பாட்டுக்கு வரும் காலம் வரை எங்கே பதுங்கிக் கொண்டிருந்தன?

மின்சாரம், பெட்ரோல், தொலைபேசி, அலுமினியம், இரப்பர் எல்லாம் கூட இதிகாச, புராண காலங்களிலே கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா? அல்லது இவைகள் இல்லாமலேயே 'புராண நாயகர்கள்', தங்கள் 'அறிவியல் சாதனைகளை' நிகழ்த்திக் காட்டினார்களா? இந்தக் கேள்விகளுக்கு பதில் கூறுங்கள் என்று இவர்களிடம் கேட்க முடியாது.

'ஆரியர்கள் அநாதிகள்; அவர்களுக்கு தோற்றமே இல்லை; காலம் காலமாக இருந்து கொண்டிருப்பவர்கள்' என்பது தான் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம். (ஆர்.எஸ்.எஸ்.சுக்கு தத்துவத்தை எழுதி வைத்த கோல்வாக்கர் அப்படித் தான் கூறுகிறார்) இப்படி ஒரு 'அபத்தமான உளறலை' தங்கள் சித்தாந்தமாக ஏற்றவர்கள் இப்படித்தான் பேசுவார்கள்.

உ.பி. துணை முதல்வர் தினேஷ் சர்மா பேசியிருக்கும் இடம் லக்னோ பல்கலைக்கழகம். இதே கருத்தை பெரியாரிஸ்டுகள் கூறினால் இந்து மதத்தைப் புண்படுத்துவதாக காவல்துறையிடம் மனு கொடுத்திருப்பார்கள். சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்த பா.ஜ.க., சங் பரிவாரங்கள் அங்கே இருப்பது இராமன் கட்டிய பாலம், அதை இடிக்கக் கூடாது என்று கூறினார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கேட்டார், 'இராமன் என்ன என்ஜினியரா?" என்று. அப்போது இதே 'சங்பரிவாரங்கள்' தான் கலைஞர் தலைக்கு விலை வைத்தன. இதிகாச காலத்திலேயே 'என்ஜினியர்கள்' இருந்திருக்கிறார்கள் என்று மற்றவர்கள் கூறினால் அது மதத்தைப் புண்படுத்துவதாம். இதிகாச காலத்திலே விமானம், சோதனைக் குழாய், இன்டர்நெட் இருந்தது என்று 'அவாள்' கூறினால், அது புனிதமாம்; இந்துப் பெருமையாம். என்னய்யா, இரட்டை வேடம்?

ஒன்று மட்டும் உண்மை; இதிகாசக் காலத்திலிருந்து மோடி காலம் வரை பொய்யர்கள் புரட்டர்கள் இருக்கிறார்கள்.

அன்று இராமன், கிருஷ்ணன், நாரதன் என்றால், இன்று மோடி, அமித்ஷா, ஆதித்யநாத், தினேஷ் சர்மா வகையறாக்கள். அவ்வளவுதான்!

**தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!**

'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு முகவரிப் பட்டியலுக்குரிய முழுமையான சந்தாத் தொகையை வழங்காத தோழர்கள் கீழ்க்கண்ட வங்கிக் கணக்குக்கு, மீதமுள்ள தொகையை அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

இதுவரை 'சந்தா' சேர்க்காத தோழர்கள், 'சந்தா' சேர்த்து இதழ் பரவிட ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

– நிர்வாகி

98414 89896

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# விருத்தாசலம்–மணப்பாறையில் கழகக் கூட்டங்கள்

**விருத்தாசலத்தில்:** கடலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நிலம், நீர், நீட் மறுப்பு விளக்கப் பொதுக் கூட்டம் நட.பாரதி தாசன் (மாவட்ட செயலாளர்) முன்னிலையில் தமிழின உணர்வாளர்கள், பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய சிந்தனையாளர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டார்கள். மாலை 6.00 மணிக்கு பெரம்பலூர் துரை தாமோதரன், ‘மந்திரமல்ல! தந்திரமே’ என்ற அறிவியல் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத் தலைவர் இளையரசன் நிகழ்ச்சியை நெறிப்படுத்த, முத்துக்கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஆசிரியர் அறிவழகன் தலைமை உரை ஆற்றினார். பின்பு தோழமை அமைப்புகளை சார்ந்த புதுச்சேரி பெ.சி.இ.தலைவர் தீனா, விழுப்புரம் மாவட்ட திவிக வெற்றிவேல், பெரியார் சாக்ரடீஸ் வி.சி.க திருமாறன், த.வா.க சின்னத்துரை, பாலகுருசாமி, மற்றும் திருச்சி பெரியார் சரவணன். சிறப்பான கருத்தியல் உரை நிகழ்த்தினார்கள்.




அதனைத் தொடர்ந்து கழகத்தின் தலைவர் கொளத்தூர்மணி மிகச்சிறப்பாக பொதுக்கூட்ட தலைப்பில் சிறப்பான உரை நிகழ்த்தினார். அரியலூர் மாவட்ட இராவண கோபால் தலைமையில் தலைவர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். பின்பு அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு தோழர்களுக்கு கொடுக்கப்பட்டது.

**மணப்பாறையில் :** திராவிடர் விடுதலைக் கழகம் மணப்பாறை சார்பாக தமிழ்நாட்டின் மீதான இந்திய தேசிய துரோகங்கள் விளக்கப் பொதுக் கூட்டம் வீ.தனபால் (மணப்பாறை ஒன்றிய பொறுப்பாளர்) தலைமையில் 30.05.2018 மாலை 6 மணிக்கு தந்தை பெரியார் சிலை அருகே, மணப்பாறையில் நடைபெற்றது. இரா.கௌசல்யா வரவேற்புரையாற்றினார். அறிவுச்செல்வன், வேழவேந்தன், மோகன்தாஸ், விஜயமோகன், பிரவீன்குமார், தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




மந்திரமா? தந்திரமா? என்ற அறிவியல் நிகழ்வை பெரம்பலூர் துரை தாமோதரன் நிகழ்த்தினார். பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை பகுத்தறிவு பாடல்களை பாடினார்கள்.

அதைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள் பொ. திருமால் (மாவட்ட துணைத் தலைவர் தி.க), நா.மதனகோபால் (மாவட்ட பொருளாளர், விசிக), பாவலர். சுடரொளியன் (பகுத்தறிவாளர் கழகம்), சி.ரா.ஆனந்தன் (ஒன்றிய துணை செயலாளர், விசிக), இளம்பொறை (மணப்பாறை நகரத் தலைவர், திக), பாவலர். மு.பசுலுதீன் (இலக்கிய அணி, திமுக), முகில்ராசு (திருப்பூர் மாவட்ட தலைவர், திவிக), சங்கீதா (திருப்பூர் மாவட்ட அமைப்பாளர், திவிக), சி.எம்.ரமேஷ் (மணப்பாறை நகர செயலாளர், திக), டைலர் சேகர் (மணப்பாறை ஒன்றிய செயலாளர், திக), ஆகியோர் உரையாற்றினார்.

தொடர்ந்து பொதுக் கூட்டத்திற்கு சிறப்புரையாற்ற நதிநீர் சிக்கலும் மத்திய அரசும் என்ற தலைப்பில் துரை காசிநாதன்(தலைமை கழகப் பேச்சாளர், திமுக), தமிழ்நாட்டின் விளைநிலத்தை அழிக்கும் மத்திய அரசு என்ற தலைப்பில் கோபி.வேலுச்சாமி(தலைமைப் பேச்சாளர், திவிக), கல்வி வேலைவாய்ப்பில் தமிழகத்தின் உரிமை பறிப்பு என்ற தலைப்பில் ஆசிரியர்.சிவகாமி (தமிழ்நாடு மாணவர் கழக தலைவர்), பணம் மதிப்பிழப்பு அறிவிப்பும், அவதியுறும் வியாபாரிகளும் தொழிலாளர்களும் என்ற தலைப்பில் பால்.பிரபாகரன்(மாநில பரப்புரைச் செயலாளர், திவிக), தமிழ்நாட்டின் தனித்தன்மையும் மத்திய மதவாத அரசியலும் என்ற தலைப்பில் கொளத்தூர் மணி (தலைவர், திராவிடர் விடுதலைக்கழகம்) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இறுதியாக மாதம்பட்டி.கார்த்திகேயன் (நகர பொறுப்பாளர், திவிக) நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

## வாழ்க்கை இணையர் தேவை

பெயர் : **சு. ஜெயச்சந்திரன்**, தி.வி.க.

திருமணம் ஆகாதவர்

வயது : 40, பிற்படுத்தப்பட்டோர்

கல்வி : எட்டாம் வகுப்பு

தொடர்புக்கு : 9159889768

முகவரி : சு. ஜெயச்சந்திரன், மணக்காடு, பேராவூரணி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 612.

எதிர்பார்ப்பு : தலித்

ஜாதி, மதம் தடையில்லை;
விதவை / மாற்றுத் திறனாளி சம்மதம்

பெயர் : **அ. செந்தில் குமார்**

வயது : 33

இனம் : ஆதி திராவிடர் (SC)

படிப்பு : DME, BE - Mechanical

முகவரி : 4/213, தெற்கு தெரு, வடமலைக் குறிச்சி (அஞ்சல்), விருதுநகர் மாவட்டம்

தொடர்புக்கு : 9524107249, 8778600064, 9385577687

எதிர்பார்ப்பு: சுயமரியாதை திருமணம்

# அரசு அடக்குமுறைக்குக் கழகம் கடும் கண்டனம்

தூத்துக்குடியில் ஆயுதமற்ற அப்பாவி மக்கள் 13 பேரை நவீன ரக துப்பாக்கிகளைக் கொண்டு குறி வைத்து மார்பிலும், வாயிலும் சுட்டுப் பிணமாக்கிய காவல்துறை மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே விசாரணை ஆணையம் என்ற சடங்குத்தனமான அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

மக்கள் உரிமைக்காகப் போராடும் இயக்கங்களைச் சார்ந்தவர்களை தமிழக அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து வேட்டையாடத் தொடங்கியிருக்கிறது. தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன், மக்கள் அதிகாரம் அமைப்பைச் சார்ந்த 6 தோழர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் . இன்னும் பலர் இதேபோல் கைது செய்யப்பட இருக்கிறார்களாம்.

இதேபோல் ஊடகங்களும் மிரட்டப்படுகின்றன. கோவையில் தனியார் கல்லூரி கலையரங்கில் ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி, ‘தொடர் போராட்டங்கள் அடிப்படை உரிமைகளுக்காகவா! அரசியல் காரணங்களுக்காகவா!’ என்ற தலைப்பில் நடந்த விவாத நிகழ்ச்சியில் கடந்த 8ஆம் தேதி திரைப்பட இயக்குனர் அமீர் பேசும்போது, (அவர் மதத்தால் இஸ்லாமியர் என்பதால்) பா.ஜ.க.வினரும் சங் பரிவாரத்தினரும் அவரைப் பேச விடாமல் கலவரத்திலும் வன்முறையிலும் இறங்கியுள்ளனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி நிறுவனத்தின் மீதும், இயக்குனர் அமீர் மீதும் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சட்டசபையில் இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தி இருக்கிறார். பா.ஜ.க.வின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, காவல்துறையை இயக்கும் தமிழக அரசையும் காவல்துறையையும் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. வழக்குகளை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டில் இயக்கங்களாக செயல்படும் 11 அமைப்புகளைத் தடை செய்ய வேண்டும் என்று மத்திய உள்துறை தமிழக அரசுக்கு அறிவுறுத்தியிருந்த செய்தி ஏற்கனவே ஏடுகளில் வெளி வந்துள்ளது. தூத்துக்குடி போராட்டத்தை ஒரு வாய்ப்பாக்கி இயக்கங்களின் தோழர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்து முடக்கி விடலாம் என்ற திட்டத்துடனேயே இந்தக் கைதுகள் நடப்பதாகத் தெரிகிறது. பெண் பத்திரிகையாளர்களை இழிவுபடுத்திய எஸ்.வி. சேகரிடம் நெருங்க முடியாமல் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டிருக்கும் காவல்துறை, மக்கள் போராளிகளை அடக்கி மிரட்ட வேண்டாம்.

## ஏற்காடு பெரியாரியல் பயிலரங்கம்

**நாள் : 23, 24 ஜூன் 2018 இடம் : ஏற்காடு சேலம் மாவட்டம்.**

**23.06.2018 சனிக் கிழமை**

காலை 10.00 மணி : தோழர்கள் அறிமுகம்
காலை 11.00 மணி : விடுதலை இராசேந்திரன் (பெரியார்- அன்றும்’ இன்றும்)
மதியம் 1.00 மணி : உணவு இடைவேளை
மதியம் 2.00 மணி : வீரா கார்த்திக் (கடவுள் மறுப்பு தத்துவமும் - பெரியாரும்)
மாலை 3.30 மணி : தேனீர் இடைவேளை
மாலை 3.45 மணி : கொளத்தூர் மணி (இந்துத்துவம் - பெரியார் - அம்பேத்கர்)
மாலை 6.00 மணி : தனித் திறமை (பேச்சு பயிற்சி, வீதி நாடகம்)
இரவு 8.30 மணி : இரவு உணவு
இரவு 9.15 மணி : கலந்துரையாடல்

**24.06.2018 ஞாயிறு**

காலை 7.00 மணி : பால்.பிரபாகரன் (இட ஒதுக்கீட்டு வரலாறு)
காலை 9.00 மணி : காலை உணவு
காலை 10.00 மணி : சுந்தர் ராஜன், பூவுலகின் நண்பர்கள் ( உலகமயமாக்கல், தாராளமயமாக்கலும் - இந்திய அரசியலும்)
மதியம் 12.00 மணி : விடுதலை இராசேந்திரன் (களத்தில் திராவிடர் விடுதலைக் கழகம்)
மதியம் 2.00 மணி : உணவு இடைவேளை
மதியம் 2.30 மணி : கொளத்தூர் மணி (தமிழர் - திராவிடர் : விளக்கம்)
மாலை 4.00 மணி : அய்யம்போக்குதல்
மாலை 5.00 மணி : சான்றிதழ் வழங்குதல்.

இந்த பயிலரங்கத்தில் பங்கேற்க முன்பதிவு அவசியம். புதிய தோழர்களுக்கு முன்னுரிமை. பயிற்சி கட்டணம் ரூ 100 மட்டும். உணவு மற்றும் தங்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்புக்கு : இரா.பிடல் சேகுவேரா, இராசிபுரம் நகரம் நாமக்கல் மாவட்டம். 9788593863

**பால்.பிரபாகரன்**
**பரப்புரைச் செயலாளர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th June 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN